DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 127/2024 |
| Deposition of witness | : | P W-3 |
| Name | : | பிரபா |
| Father's /Husband Name | : | ரங்கசாமி |
| Village | : | திருவாரூர் |
| Taluk | : | திருவாரூர் |
| Age | : | 43 |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 21st day August, 2025.
Accused absent. Petition under section 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.10.2023-ம் தேதி மாலை 04.12 மணியளவில் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணியிலிருந்தபோது 27 வயது மதிக்கத்தக்க ஹரிகிருஷ்ணன் என்பவரை அவரது சகோதரர் பரத்குமார் என்பவருடன் நன்னிலம் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சையளிக்கப்பட்டு அங்கிருந்து பரிந்துரைக்கப்பட்டு என்னிடம் மேல் சிகிச்சைக்காக வந்தார். அவரை நான் விசாரித்த போது கடந்த 22.10.2023 ம் தேதி காலை 08.00 மணியளவில் திருக்கண்டீஸ்வரம் அருகே தெரிந்த ஒரு நபரால் இரும்பு கம்பியால் தாக்கியதில் காயம் ஏற்பட்டதாக கூறினார். அவரை பரிசோதித்த போது அவர் சுயநினைவுடன் காணப்பட்டார். அவருக்கு கீழ்காணும் காயங்கள் காணப்பட்டன.

1)வலது தலையின் முன் பகுதியில் தொடுவலியும் அதே இடத்தில் வெள்ளைநிற சிறிய சிராய்ப்பு காயங்கள் இரண்டும் இருந்தது.

2) வலது பக்க முகத்தில் காதின் முன்புறம் வீக்கமும், தொடுவலியும் அதில் 1x0.5cm க்கும் குறைவான அளவிலான வெள்ளை நிற சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

அவருக்கு நான் விபத்து பதிவேட்டில் பதிவு செய்து அவருக்கு நான் முதலுதவி சிகிச்சையளித்து மேல்சிகிச்சைக்காக அனுமதித்தேன். மேற்படி நபருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேடு **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நபர் கூறுவது போல் இரும்பு கம்பியால் தாக்கப்பட்டிருந்தால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.08.23 14:24:22 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

ஒரு நபர் தடுமாறி வலது பக்கமாக சொரசொரப்பான தரையில் விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதென்றால் சரிதான்.